### தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றுப் பக்கங்களில்

# புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மன் புகழ் எந்நாளும் ஒளி வீசும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 17-

தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றில் புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மன் புகழ் எந்நாளும் ஒளி வீசும் என்று அவரது நினைவு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகத் தமிழ்நாட்டில் தோன்றிய புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவு நாள்!**

**அந்நியரின் ஆதிக்கம் பொறுக்காமல், நெஞ்சை நிமிர்த்திப் போரிட்ட அவரது புகழ், தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றுப் பக்கங்களில் எந்நாளும் ஒளிவீசும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.

### அண்ணா அறிவாலயத்தில் War Room!

# பொதுமக்களுக்கு உதவிட நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தினேன்!

### தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப் பதிவு!

சென்னை, அக். 17 -

மழையினால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவையான உதவிகள் கிடைத்திட அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள *War Room* மூலம் ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு உதவிடுமாறு கழக நிர்வாகிகளை நேரில் சென்று அறிவுறுத்தினேன் என தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2024). வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**“திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள 'War Room'ஐப் பார்வையிட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி வட்டச் செயலாளர்கள், கவுன்சிலர்கள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை முகாம்களுக்கு அழைத்துச் செல்வதோடு, அவர்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளைச் செய்துகொடுத்து, நிவாரணப் பணிகளில் அரசு இயந்திரத்துக்குத் துணை நிற்குமாறு கேட்டுக் கொண்டேன்.**

**இரவு முழுதும் விழிப்புடன் பணியாற்றி, கோரிக்கைகளை ஒருங்கிணைத்து, பொதுமக்களுக்கு உதவிடுமாறு கழக நிர்வாகிகளை அறிவுறுத்தியுள்ளேன்.**

**அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள War Room எண்: 08069446900**

**@arivalayam @DMKITwing @TRBRajaa**

**#NorthEastMonsoon #ChennaiRains #TNRains”**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### முந்தைய சராசரி அளவைவிட குரூப் 4 பணியாளர்கள் அதிகமாகத் தேர்வு!

# டி.என்.பி.எஸ்.சி. தலைவர் நியமனத்தில் முட்டுக்கட்டை போட்ட ஆளுநரை விமர்சிக்காத அன்புமணி - குரூப் 4 பணியிடங்களுக்கு கவலைப்படுவது ஏன்?

### அமைச்சர் கயல்விழி செல்வராஜ் கேள்வி!

*சென்னை, அக்.17-*

*இருக்கும் இடங்களுக்கு ஏற்பத்தான் பணியாளர்களை தேர்வு செய்ய முடியும். முந்தைய சராசரி அளவைவிட அதிகமாக குரூப் 4 பணியாளர்கள் தேர்வு நடைபெறுகிறது. டி.என்.பி.எஸ்.சி. தலைவர் நியமனத்தில் முட்டுக்கட்டை போட்ட ஆளுநரை விமர்சிக்காத அன்புமணி ராமதாஸ் அவர்கள் குரூப் 4 பணியிடங்களுக்கு ஏன் கவலைப்படுகிறார்? என மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார்.*

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:*

*‘லட்சக்கணக்கில் காலியிடங்களை வைத்துக் கொண்டு ஆண்டுக்கு டி.என்.பி.எஸ்.சி. குரூப் 4 தேர்வுக்கு 4,466 இடங்களை நிரப்புகிறார்கள்’ என அறிக்கை விட்டிருக்கிறார் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ்.*

*தமிழ்நாட்டில் அரசுப் பணியிடங்களில் உள்ள காலிப் பணியிடங்களுக்கு ஏற்ற வகையில் தான் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். தேவைக்கு ஏற்ப அல்லது புதிய துறைகள் திட்டங்கள் வரும்போது மற்றும் அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அரசு பணியிடங்களின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவு உருவாகும்.*

*இதன்படி ஒவ்வொரு ஆண்டும் உருவாகும் காலி பணியிடங்களின் தேவைக்கேற்ப அரசுப் பணியாளர்களை தேர்வு செய்யப்படுகிறது. ‘குரூப் 4 இடங்களை 15 ஆயிரமாக அதிகரிக்க வேண்டும்’ என சொல்கிறார் அன்புமணி ராமதாஸ் அவர்கள். அந்த 15 ஆயிரம் பேருக்கு போதுமான எண்ணிக்கையில் தேவையான பணியிடங்கள் காலியாக இருக்க வேண்டும் என்பது நிர்வாக விதி. இதை டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் அறியாதவர் அல்லர்.*

*’குரூப் 4 காலியிடங்களின் எண்ணிக்கையை வெறும் 2,208 மட்டுமே உயர்த்தி டி.என்.பி.எஸ்.சி.*



*அறிவிப்பு வெளியிட்டிருப்பது ஏமாற்றமளிக்கிறது’ என்கிறார் அன்புமணி ராமதாஸ். இருக்கும் இடங்களுக்கு ஏற்பத்தான் பணியாளர்களை தேர்வு செய்ய முடியும்.*

*2015-16, 2016-17, 2017-18 ஆகிய நிதியாண்டுகளுக்கு காலியான குரூப் 4 பணியிடங்களுக்கு 2017-ல் தேர்வானவர்கள் 11,949 பேர். 2018-19, 2019-20 ஆகிய நிதியாண்டுகளுக்கு காலியான குரூப் 4 பணியிடங்களுக்கு 2019-ல் தேர்வானவர்கள் 9684 பேர்.*

*2020-21, 2021-22, 2022-23 ஆகிய நிதியாண்டுகளுக்கு காலியான பணியிடங்களுக்கு 2022-ல் தேர்வானவர்கள் 10,139 பேர். இதன்படி பார்த்தால், ஒவ்வொரு நிதியாண்டுக்கும் சராசரியாக 3,972 பேர் தேர்வு செய்யப்பட்டனர். ஆனால், இப்போது 2023-24, 2024-25 ஆகிய நிதியாண்டுகளுக்கு காலியான இடங்களை நிரப்ப 8,932 பேர்களை தேர்வு செய்ய போகிறோம்.*

*இது முந்தைய சராசரி அளவான 3,972 விட அதிகம். அதாவது சராசரியாக 4,466 பேர்கள் இப்போது தேர்வு செய்யப்படுவார்கள். இங்கே இன்னொரு விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். முந்தைய அதிமுக ஆட்சியில் அரசு ஊழியர் பணி ஓய்வு வயது 58ல் இருந்து 60 ஆக உயர்த்தப்பட்டது. ஆனாலும் கூட முந்தைய ஆண்டுகளைவிட அதிக எண்ணிக்கையில்தான் பணி யார்களை தேர்வு செய்கிறது டி.என்.பி.எஸ்.சி.*

*’இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் விஷயத்தில் தமிழக அரசு காட்டும் அக்கறையின்மை கண்டிக்கத்தக்கது’ என சொல்லியிருக்கிறார் அன்புமணி ராமதாஸ் அவர்கள். இளைஞர்கள் மீது அக்கறை கொண்டதால்தான், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அரசு பொறுப்பேற்ற பிறகு கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுத் துறைகளில் 68,039 இளைஞர்களுக்கும், தனியார் நிறுவனங்களில் 5,08,055 இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.*

*இந்தியா மட்டுமல்ல, உலகின் பெரிய நிறுவனங்களும் முதலீடு செய்யும் முகவரியாக தமிழ்நாட்டை திமுக அரசு மாற்றியதால்தான் கடந்த 3 ஆண்டுகளில் 10 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகளை ஈர்த்து, 31 லட்சம் பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.*

*அதோடு நிற்காமல் உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்து, முதலீடுகளை தமிழக அரசு ஈர்த்து வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பது மட்டுமல்ல, அதை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. சில நாட்களுக்கு முன்பு கூடிய அமைச்சரவை கூட்டத்தில் 38 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 14 புதிய முதலீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 46 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இப்படி இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கு வேண்டிய அத்தனை முயற்சிகளையும் தமிழக அரசு முன்னெடுக்கிறது.*

*ஓராண்டுக்கு மேலாக யாரும் நியமிக்கப்படாத நிலையில் டி.என்.பி.எஸ். சி. தலைவர் பதவியை நிரப்ப வேண்டும் என்ற நோக்கில், ஓய்வுபெற்ற போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திரபாபுவை தேர்வு செய்து, பரிந்துரையை கவர்னர் ஆர்.என்.ரவியின் ஒப்புதலுக்கு அனுப்பினோம். ஆனால், அவர் காலம் தாழ்த்தி திருப்பி அனுப்பினார். ஆளுநர் எழுப்பிய கேள்விகளுக்கு அரசு விளக்கம் அளித்தும் ஆளுநர் செவிசாய்க்கவில்லை. கடைசியில் போராடி தேர்வாணையத்தின் தலைவராக எஸ்.கே.பிரபாகர் கடந்த மாதம்தான் நியமிக்கப்பட்டார்.*

*அப்போது ஆளுநர் முட்டுக்கட்டை போட்ட போது ஆளுநரை கண்டித்து அறிக்கை விடாத அன்புமணி அவர்கள், குரூப் 4 பணியிடங்களுக்கு ஏன் கவலைப்படுகிறார்? ராஜ்பவனில் அமர்ந்து கொண்டு தேர்ந்தெடுத்த அரசுக்கு எதிராக செயல்பட்டு கொண்டிருக்கும் ஆளுநரை கண்டித்தால் கூட்டணி கட்சியான பா.ஜ.க. கோபித்து கொள்ளும் என்ற கவலையில் கடிதோச்சி மெல்ல எறிக பாணியில் அரசியல் நடத்தும் அன்புமணி டி.என்.பி. எஸ்.சி. பற்றி எல்லாம் பேசலாமா?*

*டி.என்.பி.எஸ்.சி. முறைகேட்டால் ஒழுங்கா படிச்சு எக்ஸாம் எழுதின ஆயிரக்கணக்கானோரின் வேலைவாய்ப்புகள் அ.தி.மு.க. ஆட்சியில் பறிபோயின. 2011-ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நடந்த முறைகேட்டின் உச்சமாக 2019 செப்டம்பரில் நடந்த குரூப்-4 தேர்வில், மெகா முறைகேடுகள் அரங்கேறின. அப்போதெல்லாம் அன்புமணி எங்கே போனார்?.*

*போலீஸ் எஸ்.ஐ. சித்தாண்டியும், சென்னை முகப்பேரைச் சேர்ந்த ஜெயக்குமாரும், இடைத்தரகர்களாகச் செயல்பட்டு கோடிக்கணக்கில் பணத்தை வசூலித்து நூற்றுக்கணக்கானவர்களுக்கு பணியிடங்கள் பெற்றுத் தந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது எல்லாம் நினைவில் இல்லையா?.*

*முந்தைய ஆட்சியில் டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகளுக்கான கேள்வித் தாள்கள் இடைத்தரகர்களுக்குக் கைமாறின. இப்படியான முறைகேடு கள் எல்லாம் நடக்காமல் டி.என். பி.எஸ்.சி.யை சிறப்பாக வழிநடத்தி தி.மு.க. அரசு செயல்பட்டு கொண்டிருக்கிறது.*

*இவ்வாறு அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.*

### பொதுமக்களிடமிருந்து பெறப்படும் அனைத்து மனுக்களின் மீதும்

# தீர்வு காண அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்!

### வருவாய்த்துறை அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

*சென்னை, அக். 17-*

*சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து வருவாய்த்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் 15.10.2024 அன்று மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்திற்குப்பின் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசியதாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது அதிக முக்கியத்துவம் அளித்து நிறைவேற்றிட அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும், அவர்களுக்கான அரசு நலத்திட்ட உதவிகள் சென்று சேருவதை உறுதி செய்யும் வகையில் ஆய்வுக் கூட்டங்களும் நடத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், சேலம் மாவட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து வருவாய்த்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் இன்றையதினம் நடத்தப்பட்டது.*

*சேலம் மாவட்டத்தில் கடந்த 2021 மே மாதம் முதல் தற்போது வரை வருவாய்த்துறையின் மூலம் நத்தம் நிலவரித்திட்டம், இலவச வீட்டுமனைப் பட்டா, மாற்றுத்திறனாளிகளுக்கானஇலவசவீட்டுமனைப் பட்டா, ஆதிதிராவிடர்*



*மற்றும் பழங்குடியினருக்கான பட்டா என மொத்தம் 27,081 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று, பட்டாக்கள் வேண்டி பொதுமக்கள் வழங்கிய பல்வேறு கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*உட்பிரிவு மற்றும் உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதல் தொடர்பாக வரப்பெற்ற மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, பட்டா கோரி பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களின் மீது எவ்வித காலதாமதமும் இன்றி விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*மேலும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் பல்வேறு இனங்களில் 2,10,373 நபர்களுக்கு ஓய்வூதியங்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோன்று, ஓய்வூதியங்கள் வேண்டி வழங்கப்பட்டுள்ள நிலுவை மனுக்கள் மீதும் விரைந்து தீர்வுகாண அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் 14 வட்டங்களில் மொத்தம் 5,49,268 மகளிர் இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000/ பெற்று பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே விண்ணப்பித்து சரிபார்ப்பில் உள்ள விண்ணப்பங்கள் குறித்தும், மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் குறித்தும், நிலுவையில் உள்ள மேல்முறையீடுகள் குறித்தும் விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.*

*முதல்வரின் முகவரித் துறையின் வாயிலாக சேலம் மாவட்டத்தில் வரப்பெற்ற 3,88,733 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, தகுதியின் அடிப்படையில் 2,33,483 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மீதமுள்ள மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*அதேபோன்று, சேலம் மாவட்டத்தில் நகர்புறங்களில் 18.12.2023 முதல் 06.01.2024 வரை 142 மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு 54,337 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அனைத்து தகுதியான மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டு, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மேலும், கிராமப்புறங்களில் 11.07.2024 முதல் 06.08.2024 வரை நடைபெற்ற 92 மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்கள் மூலம் 43,111 மனுக்கள் பெறப்பட்டு அனைத்து தகுதியான மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளன. அதேபோன்று, கடந்த மூன்றரை ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் 84,061 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் அனைத்துத்தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, மாவட்ட ஆட்சியரகத்தில் நடத்தப்படும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவரின் மக்கள் சந்திப்பு திட்ட முகாம், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு இனங்களில் பெறப்படும் அனைத்து கோரிக்கை மனுக்களின் மீதும் தொடர்புடைய அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான மனுக்களுக்கான தீர்வுகளை வழங்கிட இக்கூட்டத்தின்போது அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.*

*இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி ஆக்ரிதி சேத்தி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி அ.மயில், வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி அ.அபிநயா, திருமதி ந.லோகநாயகி, திருமதி தா. பிரியதர்ஷினி, துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி ஆர்.மாருதிபிரியா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

### தென்காசி வடக்கு மாவட்டம்

# சிவகாசியில் முத்தமிழறிஞர் கலைஞர் அறிவாலயக் கட்டிடம்!

### மாவட்டக் கழகம் முடிவு!

*தென்காசி.அக்.17.*

*கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியில் தமிழக மக்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெற்று மனநிறைவுடன் வாழ்ந்து வருகின்றனர். கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து மக்கள் பணியை ஆற்றி வருகிறார். கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளை ஏற்று கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சருமான கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிவுறுத்தலின்படி தென்காசி வடக்கு மாவட்டம் சிவகிரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அறிவாலயம் கட்டிடம் அமைத்திட தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முடிவு செய்யப்பட்டது.*

*அதன்படி பணிகள் விரைந்து செயல்பட தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. உடனடி நடவடிக்கையாக சிவகிரியில் கலைஞர் அவர்களின் அறிவாலயம் கட்டிட குழு தலைவர் மற்றும் 14 நிதி குழு உறுப்பினர்களை கீழ்க்கண்டவாறு நியமனம் செய்துள்ளார்.*

*அவர்கள் பற்றிய விவரம் வருமாறு.*

*தலைவராக கழக தீர்மான குழு உறுப்பினர் ப.ஆ.சரவணன்.நிதிக்குழு உறுப்பினர்களாக யு.எஸ். டி.சீனிவாசன் (தலைமை செயற்குழு உறுப்பினர்) மருத்துவர்.செ.சு.செண்பக விநாயகம் (மாநில மருத்துவரணி துணைச் செயலாளர்) பொன்.முத்தையா பாண்டியன்(வாசு ஒன்றிய குழு தலைவர், வாசு வடக்கு ஒன்றிய செயலாளர்) வே.மனோகரன் (மாவட்ட துணைச் செயலாளர்)மா.விஜய் பிரவீன் (வழக்கறிஞர்) ப.சுந்தர வடிவேலு (மருந்தாளுநர்) சேது சுப்பிரமணியன் (பேரூர் பொறுப்பாளர்) கே.டி.சி.குருசாமி என்ற சர்க்கரை குரு(பேரூர் செயலாளர்)*

*மருத்துவர் நல்லசிவன் (மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர்) கிருஷ்ண லீலா (மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்) எ.சாமுவேல்(வார்டு செயலாளர்)க.ரத்தினராஜ் (முன்னாள் வார்டு செயலாளர்) க. பிச்சுமணி (வார்டு செயலாளர்)ப.தங்கராஜ் (தகவல் தொழில் நுட்ப அணி) ஆகியோர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

### வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை!

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!


### மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கை!

*மதுரை, அக் 17-*

*மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் வருகிற 19ம் தேதி மாலை 5மணிக்கு திருமங்கலம் ஜி கே எம் பேலஸ் திருமண மஹாலில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்ற நடைபெற உள்ளதாக மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கழகத்தினருக்கு தமது அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள் ளார்.*

*அதன் விபரம் வருமாறு:-*

*நாடு போற்றும் நம் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி தமிழ்நாட்டில் அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்*



*கும் புதிதாக பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*அது போன்று தெற்கு மாவட்டத்தில் உள்ள திருமங்கலம், உசிலம்பட்டி மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகளுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர், அது தொடர்பாகவும், மழைக் காலங்களில் கழகத்தினர் ஆற்ற வேண்டிய மக்கள் பணி குறித்தும், வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் உள்ளிட்ட பணிகளில் கழகத்தினர் ஈடுபடுவது குறித்தும் மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 19.10.2024 சனிக்கிழமை மாலை 5மணிக்கு திருமங்கலம் நான்கு வழிச் சாலை, மேலக்கோட்டை விளக்கில் அமைந்துள்ள ஜி. கே.எம்.பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.*

*இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்று கிறார். எனவே சிறப்புமிக்க இக் கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் நிர்வாகிகள், வட்ட வார்டு கிளைக் கழக செயலாளர்கள் பிரதிநிதிகள் நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், பாக முகவர் BLA2, பாக முகவர்கள் BLC, கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் தவறாது வருகை தந்து கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்*

*இவ்வாறு மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன்*

*தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்*